**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.834/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | மீஹா, வயது 47 |
| Father Name/Husband Name | : | ராமசுவாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of July 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 03.09.2022 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு த.கா சுமித்ரா, த.கா ரமேஷ், தலைமை காவலர் பால்ராஜ் ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து 07.45 மணிக்கு நடராஜபுரம், காக்காச்சியம்மன் கோவில் அருகே கண்காணித்து வரும்போது பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த காந்திராஜ், வயது 51, த.பெ வேலுசாமி என்பவர் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்குபையை சோதனை செய்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Seamen's pride classic brandy 30 எண்ணம் வைத்திருந்ததை 08.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றி நிலையம் 09.00 மணிக்கு வந்து நிலையகுற்ற எண். 89/2025, சட்டபிரிவு 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், நீதிமன்றம் மூலம் தடய அறிவியல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பியும், இவ்வழக்கில் சம்பவம் உண்மை என புலனனாதால் எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து

நிலைய பிணையில் விடுவித்து 19.09.2025 ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது 2 முன்வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், மற்றும் சுமார் 180 ML அளவு கொண்ட Seamen's pride classic brandy பாட்டில்கள் 30 எண்ணம் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2 முதல் தகவல் அறிக்கையில் அத்தாட்சி பிறப்பிக்கப்பட்ட நேரம் 08.30 என்று உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட நேரம் 07.30 முதல் 08.30 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கையெழுத்து பிழையினால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சம்பவம் 07.30 மணிக்கு நடைபெற்றதாக பொய்யாக முதலில் எழுதிவிட்டு பின்பு வழக்கிற்காக 08.30 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3 பொதுவாக ரோந்து சென்றதற்கு தனிஅறிக்கை வழங்கப்படும் என்றால் சரியல்ல, காவலர்கள் ரோந்து செல்வது அவர்களது பணி என்பதால் நிலைய ஆவணங்களில் பதிவு செய்யப்படும். பொதுவாக காலை 07.00 மணிக்கு ரோந்துக்கு காவலர்கள் செல்வார்கள் என்றால் நேரத்தை குறிப்பிட்டு சொல்லமுடியாது, 24 மணி நேரமும் போலீசாருக்கு ரோந்து பணி உண்டு. போலீசார் தனியாக ரோந்து சென்றார்களா அல்லது ஒரே வாகனத்தில் ரோந்து சென்றார்களா என்று வழக்கு கோப்பில் துலங்குமா என்றால் துலங்காது, அது வழக்கிற்கு தேவையில்லை என்பதால் குறிப்பிடவில்லை. காவலர்கள் ரோந்துக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

4 எதிரி சம்பவ இடத்தில் வைத்து மது விற்பனை செய்ததாகவோ, தனிநபர்கள் மது வாங்கி கொண்டிருந்ததாகவோ அத்தாட்சியில் துலங்குமா என்றால் துலங்காது, இவ்வழக்கானது அரசு தனிநபர் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக மதுபாட்டில்கள் வைத்திருத்தாகவும், மதுபாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்தாகவும் பதிவு செய்யப்பட்டது.

5 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.